09.12.2024

O.S.No.221/2016

பி.வா.சா.2.திருமதி.அமிர்தம்  க.பெ. வீரணன்

சாட்சி இன்று  அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு** விசாரணை

நான் கிடாரிப்பட்டியில் இருந்து வருகிறேன். நான் குடியிருக்கும் இடம் ராஜசேகருக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்தில் ராஜசேகர் என்பவர் வீடுகட்டியுள்ளார் ஒரு ஏக்கரில் மாங்கன்றுகள் வைத்துள்ளார். தாவா சொத்தை சுற்றிலும் கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. அந்த வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளது அதற்கு மின்சார கட்டணம் ராஜசேகர் கட்டி வருகிறார். தாவா சொத்தை பாதுகாப்பதற்காக என்னை அதில் குடியமர்த்தியுள்ளார். எனக்கு மாதம் 15 ஆயிரம் ராஜசேகர் தாவா சொத்தை பார்த்து கொள்வதற்காக சம்பளமாக கொடுத்து வருகிறார். தாவா சொத்திற்குள் வேறு யாரும் வந்து பார்த்தார்களால் என்றால் இல்லை. தாவா சொத்து இன்று வரை ராஜசேகர் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான்.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாவா சொத்தில் 23 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். அவ்வாறு 23 ஆண்டுகளாக குடியிருந்து வருவதாக சொல்லுவதற்கும், தோட்டதை பாதுகாத்து வருவதாக சொல்லுவதற்கும் எழுத்து பூர்வமான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு எழுத படிக்க தெரியாது. கையெழுத்து போட தெரியும். எனது நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் நான் கூறியதன் அடிப்படையில்தான் தயார் செய்யப்பட்டது. தாவா சொத்து ராஜசேகருக்கு பாத்தியம் என்று கிரைய ஆவணம் என்னிடம் காண்பித்துள்ளாரா என்றால் ஒரு பத்திரம் என்னிடம் காண்பித்துள்ளார் எனக்கு படிக்க தெரியாது எப்போது காண்பித்தார் என்றால் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் காண்பித்தார். ராஜசேகரனுக்கு பாத்தியப்பட்டது 1 ஏக்கர் என்று சொல்லுவார்கள். எத்தனை கல்லுக்கால்கள் இருக்கின்றன என்றால் எனக்கு தெரியாது. கம்பி வேலிபோட்டு 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. கம்பிவேலிக்கு கதவு போடவில்லை. நான் குடியிருக்கும் வீட்டிற்கு கதவு எண் என்ன என்றால் எனக்கு ஞாபகமில்லை. அவ்வாறு கதவு எண் எதுவும் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் குடியிருப்பதற்கு குடும்ப

அட்டை போன்ற ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் குடும்ப அட்டை உள்ளது என்றால் சரிதான். எனது குடும்ப அட்டையில் எனது பேரன் மனைவி மற்றும் அவரது குழந்தைகள் பெயர்கள் இல்லை என்றால் சரிதான். எத்தனை மாமரங்கள் உள்ளன என்றால் எனக்கு தெரியாது. ராஜசேகர் நான் காவல் காப்பதற்காக எனக்கு பணம் கொடுப்பதாக சொல்லியிருப்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பற்றியோ இந்த வழக்கை பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் ராஜசேகர் தயார் செய்து கொடுத்த நிருபண வாக்குமூலத்தை நான் தாக்கல் செய்து அவரிடம் பண பலன்கள் பெற்று வருவதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டையை இந்த வழக்கில் தாக்கல் செய்திருந்தால் நான் குடியிருக்கும் விலாசம் தெரிந்துவிடும் என்பதால் அதை மறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அந்த ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் காத்து வருவதற்கு ராஜசேகர் சம்பளம் எதுவும் கொடுக்கிறாரா என்பதை பற்றி எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**வாதிதரப்பு குறுக்கு விசாரணை**

நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. ராஜசேகரன் அழைத்ததன் பேரில் நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன். நான் வசிக்கும் இடம் கிடாரிபட்டி ஊராட்சியில் கட்டுப்பட்டது. நான் 100 நாட்கள் வேலைவாய்ப்பு திட்டத்தில் பணியாற்ற செல்வேன் என்றால் எப்போதாவது செல்வேன் அவ்வாறு பணியாற்றி சம்பளம் பெற்றேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு, மற்றும் வரி ரசீது ஆகியவை வாதி பிரன்சிஸ் பாஸ்டியன் பேரில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரான்சிஸ் பாஸ்டியனுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் ஆவணங்கள் அனைத்தும் அவர் பெயரில்தான் உள்ளது என்றாலும் சரியல்ல. தாவா சொத்து பிரான்சிஸ் பாஸ்டின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும் இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் குடியிருப்பதாக சொல்லுவதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2 மாதத்திற்கு முன்பு தாவா சொத்தில் நான் அத்துமீறி இருப்பதாக என்னை காவல் நிலையத்தில் இருந்து வந்து வெளியேற சொன்னார்களா என்றால் சரியல்ல. வாதி கொடுத்த புகாரின் பேரில் காவல்

நிலையத்ததார் என்னை விசாரித்தார்கள் என்றாலும் நான் அதை மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் நான் ஒருபோதும் குடியிருந்தது இல்லை என்றாலும் நான் கூறுவதுபோல் காவல் காத்து வருகிறேன் என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.